**Dated : 30.01.2025**

**O.S.No. 226/2021**

**PW.2 – திரு. சுஜாதா,**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கிரய ஒப்பந்த உடன்படிக்கை எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் வேப்பனப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. அந்த உடன்படிக்கை பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதினார்கள். இதில் சம்மந்தப்பட்ட நபர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் மஜித், வாஜித், சுபேர், உமர் கான் ஆகிய 1 முதல் 4 பிரதிவாதிகள் சம்மந்தப்பட்ட நபர்கள் ஆவார்கள். மேற்படி கிரய ஒப்பந்த உடன்படிக்கை பத்திரத்தை சல்மா என்ற பெயருக்கு போடப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கை ஒப்பந்த பத்திரத்தில் சல்மாவும் சேர்த்து தான் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ல் சல்மா கையெழுத்து செய்யவில்லை என்றால், அந்த ஆவணம் எழுதப்பட்ட போது அங்கு அவர் இருந்தார். உண்மையில் சல்மா அங்கிருந்து பணம் கொடுத்திருந்தால் கண்டிப்பாக அவர் அந்த ஆவணத்தில் கையெழுத்து செய்திருப்பார் என்றும், அவர் அங்கு இல்லை என்பதால் தான், பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் அவர் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. 26.05.2020ல் அன்றே ரூ.10.00 இலட்சத்திற்கு கிரயம் பேசி அதில் ரூ.9.50 இலட்சத்தை கிரய முன்பணமாக அன்றைய தினமே கொடுக்கப்பட்டுவிட்டது.

மேற்படி தொகையை ரூ.500/– நோட்டு தாள்களாக கொடுத்தார். சல்மா வா.சா.ஆ.3ல் கையெழுத்து போடவில்லை என்பதால் அந்த ஆவணம் முழுமையடையவில்லை என்பதாலும், அந்த ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல. மேற்படி அன்றைய தினமே வா.சா.ஆ.3ஐ எழுதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தாவா உடன்படிக்கைக்கு சம்மந்தப்பட்ட சொத்தானது யாருக்கு பாதிக்கப்பட்டது என்றால் பிரதிவாதியின் தாயார் ரோசன் பீ என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ரோசன்பீ குடும்பத்தை பற்றி தெரியுமா என்றால் அந்த அம்மா உயிருடன் இல்லை, அவர் குடும்பம் தெரியும்., ரோசன் பீ இறக்கும் போது அவருடைய கணவர் உயிருடன் இருந்தார். அவர் உயிருடன் இருந்ததால் அந்த சொத்தில் அவரும் வாரிசு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போது ரோசன்பீயுடன் சேர்ந்து வாழவில்லை.

ரோசன்பீக்கு கலீல் என்ற மூத்தமகன் ஒருவர் உள்ளார் என்றால் அந்த விவரம் தெரியாது. அவர் விபத்தில் இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையிலேயே இடத்தை வாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டிருந்தால், ரோசன்பீ–ன் வாரிசு சான்றுயையும், அவருடைய இறப்பு சான்றையும் சரிபார்த்து தான் வா.சா.ஆ.3 எழுதப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. ரோசன்பீ–ன் வாரிசு சான்றிதழை நான் பார்க்கவில்லை என்றாலும் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். ரோசன்பீக்கு சம்மந்தப்பட்ட அனைத்து வாரிசுகளும் கையெழுத்து செய்தால் தான் அந்த ஆவணம் செல்லுபடியாகும் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. அக்ரிமெண்டில் காட்டப்பட்டுள்ள சொத்து விவரம் எனக்கு தெரியும், அந்த சொத்து விஸ்தீரணம் 8 சென்ட் ஆகும். அந்த சொத்து எங்கு அமைந்துள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் சோமநாதபுரத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும்.

நான் அந்த இடத்தில் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்திருந்தால் சொத்தின் நான்கு எல்லைகளும் எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வாதி திருப்பதியும், நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான், ஆனால் உறவினர்கள் கிடையாது. இன்று நீதிமன்றத்திற்கு வாதி தான் அழைத்து வந்தார் என்றால் அவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார், நான் நீதிமன்றத்திற்கு வந்தேன். 30.01.2021 தேதி நானும், வாதியும் ரூ.50,000/–ஐ ரொக்கமாக எடுத்து சென்று பிரதிவாதிகளிடம் கொடுத்து கிரயத்தை முடித்து கொடுக்கும்படி கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கேட்ட போது எல்லாம் பிரதிவாதிகள் வாய்தா கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த பிரதிவாதிகள் வாதியிடம் ரூ.7.00 இலட்சம் கடன் கேட்டார்கள் என்றும், அதற்கு வட்டியும் சேர்த்து ரூ.9.50 இலட்சத்திற்குண்டான பணம் கேட்டதாகவும், அதற்கு ஆதரவாக வாதி பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தால் பணத்தை கொடுப்பதாக வாதி பிரதிவாதிகள் சொன்னதின் அடிப்படையில் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணம் தான் இந்த ஆவணம் என்றும், பிரதிவாதிகள் சொத்தை விற்பதற்காக வா.சா.ஆ.3ஐ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.3ல் சொல்லியுள்ளபடி அன்றைய தினம் வாதி பணம் எதுவும் கொடுக்கவில்லை என்பதால் சல்மா சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் சொல்லியுள்ள படி வாதி பிரதிவாதிகளுக்கு கிரய முன்பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வா.சா.ஆ.3 ஆனது ஜோடிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. வாதி திருப்பதி வட்டிக்கு பணம்

கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வாறு ஒரு ஒப்பந்தமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரிய பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதியும், நானும், பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்களா என்றால் இல்லை, எதிர் வீட்டுக்காரர்கள், ஒரே வகுப்பை சார்ந்தவர்களும் கிடையாது.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.